hallo–ar.ch

Appenzell Ausserrhoden

# பாடசாலையும் கல்வியும்

கல்வித்திட்டம்
கட்டாயப்பாடசாலை
தொழிற்கல்வி / துறைசார் பாடசாலைகள்
பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிலையங்கள்
பட்டப்படிப்பு அங்கீகாரம்.

# கல்வித்திட்டம்

சுவிஸ் கல்வித்திட்டம் உறுதியான ஆளமை வளர்ச்சிக்குரிய வாய்ப்பைக் காட்டி நிற்கிறது. உயர்ந்த பெறுமதியான தொழிலைத் தொழில்கல்வி தரும். ஆரம்பத்தில் அடிப்படைப் பயிற்சியைப் பெற்று பின்பு உயர்கல்வி அல்லது பட்டப்படிப்புப் படிக்கலாம்.

## உருவாக்குதல் / பொறுப்பு

சுவிஸில் மூன்று ஒன்றன்பின் ஒன்றாக உருவாக்கப்பட்ட வித்தியாசமான கல்வித் திட்டங்கள் உள்ளன:

- கட்டாயப்பாடசாலை (Volksschule: Kindergarten, Primarschule und Sekundarstufe I)
- தொழில் அடிப்படைக்கல்வி அல்லது தொழில்சார்கல்வி (Sekundarstufe II)
- உயர்கல்விப் பாடசாலை/பல்கலைக்கழகமும் உயர்தொழில்கல்வி (Tertiärstufe)

மேலுள்ள 3 நிலைகளுக்கும் அரசே பொறுப்பாகும். அதன் செயற்பாடுகளும் பொறுப்புகளும் அரசு மாநிலம் கிராமசபையால் பகிரப்படும்.ஆகையினால் பாடசாலையும் கல்வித்திட்டமும் மாநிலங்களுக்கிடையில் வித்தியாசப்படும்.

## பாடசாலையின் பொறுப்புகள்

அறோ மாநிலத்தில் கட்டாயப்பாடசாலை 11 வருடங்கள் ஆகும். இங்கு பிள்ளைகள் 4 வயதிலேயே படிப்பைத் தொடங்குகிறார்கள். காரணம் காட்டி அனுமதி பெறாமல் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாவிடின் பெற்றோர் அபராதப்பணம் மூலம் தண்டிக்கப்படுவர். 16 வயதிற்குட்பட்ட இளையவர்கள் புதிதாகக் குடிபெயர்ந்து வந்திருந்தால் அவர்கள் கட்டாயப்பாடசாலைக்குப் போக உரிமையுண்டு. இளையவர்கள் அதன் பின்பு புதிதாகக் குடிபெயர்ந்து வந்தால் Informationsstelle Integration (INFI) ஒருங்கிணைப்பு தகவல் மையத்தில் பிற விருப்பங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம்.

## கட்டாயப்பாடசாலையின் பின்பான பயிற்சி

கட்டாயப்பாடசாலையின் பின்பு அதிகமான இளையவர்கள் தொடர்நது கல்வியைக் கற்பார்கள்.விசேடமாக அதிகமானவர்கள் தொழில் அடிப்படைப்பயிற்சியைத் (தொழில்பயிலுதல், Berufslehre) தொடங்குவார்கள். இதுவே பின்பு உயர்தொழில் கல்வி கற்பதற்கு நுழைவாயில் ஆகலாம். தொழில் அடிப்படைக்கல்வியின் போதோ அல்லது பின்போ தொழில் புலமைக்குக் (Berufsmaturität) கற்றிருந்தால் பின்பு உயர்துறைக் கல்லூரிக்கு (Fachhochschule) போகலாம். 20 வீதமான இளையவர்கள் யிம்நாசியப்புலமை (gymnasiale Maturität) கற்று நேரடியாகவே பல்கலைக்கழக உயர்கல்விக்குப் போகிறார்கள்.

## உதவிநிதி

பணவசதி குறைந்தவர்கள் உதவிப்பணம் (Stipendien) மூலம் பாடசாலையிலோ அல்லது தொழில்கல்வியோ கற்கலாம். இது கட்டாயப்பாடசாலையின் பின்பு தொடர்ந்து கற்பதற்குரிய உதவிப்பணமாக வழங்கப்படும். **Appenzell Ausserrhoden** மாநிலத்தில் வாழும் வெளிநாட்டவர்களும் கூட வசதி குறைந்திருந்தால் இந்த உதவியால் பயனடையலாம். ஆயினும் கூட மாணவர்களின் அல்லது அவர்கள் பெற்றோர்களின் தேசியஇனம், வதிவிட உரிமை நிலையைப் பொறுத்தும் இந்த உதவிப்பணம் பெறுவது தங்குள்ளது. மேலதிக தகவல்களை மாநில நிர்வாகத்தின் கல்வி மற்றும் பயிற்சி உதவித் துறை வழங்குகிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-ar.ch/ta/school-and-education/education-system

# கட்டாயப்பாடசாலை

கட்டாயப்பாடசாலை பிள்ளைகளுக்குப் போதிக்கும் அடிப்படைக்கல்வியுடன் தொடர்ந்தும் கற்பதற்கு உதவியாக இருக்கும். பகிரங்கப் பாடசாலைகள் இலவசமானவை.

## பிள்ளையைப் பதிதல்

பகிரங்கப் பாடசாலைகளின் செயற்பாடுகளுக்கு கிராமசபைகளே பொறுப்பாகும். பிள்ளையைப் பாடசாலைக்குப் பதிவதற்கு கிராமசபையிலோ அன்றி நேரடியாகப் பாடசாலை அதிபரிடமோ தொடர்பு கொள்ளலாம்.

## பாடசாலை நிலைகள்

கட்டாயப்பாடசாலை மூன்று ஒன்றன்பின் ஒன்றான நிலைகளைக் கொண்டது:

- சிறுவர் பாடசாலை (Kindergarten) 2 வருடங்கள் எடுக்கும். முதல் ஆண்டு விருப்பத்திற்குரியது, இரண்டாவது ஆண்டு கட்டாயமாகும்.
- ஆரம்பப்பாடசாலை (Primarschule) 6 வருடங்கள் எடுக்கும். ஊக்கமும் உதவியும் தேவையான பிள்ளைகளுக்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் கொடுக்கப்படும்.
- மேல்நிலை (தொடக்கமேல் நிலை I) 3 ஆண்டுகள் நீடிக்கும். மேல்நிலையில், குழந்தையின் தேவைகளுக்கு ஏற்ப பல மாதிரிகள் உள்ளன. இந்த நிலை அடிப்படை கல்வியை ஆழமாகக் கற்பிப்பதற்கும், இளைஞர்களை தொழில் தேர்வு, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் பெரியோரின் வாழ்க்கைக்கு தயார்படுத்துவதற்கும் பயன்படுகிறது.
- தாய்மொழி டொச் அல்லாத பிள்ளைகளுக்கு எல்லாப் பிரிவிலும் விசேட கவனம் கொடுக்கப்படும்.

ஜெர்மன் மொழி பேசாத குழந்தைகள் அனைத்து நிலைகளிலும் சிறப்பு உதவியை பெறுகின்றனர்.

## பகிரங்க / தனியார் பாடசாலை

பகிரங்கப் பாடசாலைகள் இலவசமானவை. இங்கு ஆண் பிள்ளைகள் பெண்பிள்ளைகள் சேர்ந்தே ஒன்றாகக் கற்பார்கள். பாடங்கள் மதச்சார்பற்றவை. அதிகமான (95%) சிறுவர்கள் இளையவர்கள் தமது கட்டாயப்பாடசாலையை பகிரங்கப் பாடசாலையிலேயே படிப்பார்கள். தனிப்பட்ட பாடசாலைகளும் உள்ளன. பிள்ளைகளைத் தனிப்பட்ட பாடசாலைக்கு அனுப்ப விரும்பும் பெற்றோர் செலவுகளைத் தாமே பொறுப்பெடுக்க வேண்டும்.

## பெற்றோரின் உரிமைகளும் பொறுப்பும்

பிள்ளைகளின் தினசரிப் பாடசாலை நாட்கள் மற்றும் அவர்கள் திறமைகள் பற்றியும் பெற்றோருக்கு அறியத்தருவது பாடசாலையின் பொறுப்பாகும். அதற்காகவே பெற்றோருடன் கலந்துரையாடல் (ஆசிரியர் பெற்றோருக்கிடையில்) பெற்றோர் மாலை (பாடசாலைத் தகவல்களைப் பெற்றோருக்கு அறியத்தருதல் ) மற்றும் தகவல் நிகழ்ச்சிகள் இடம்பெறும். அதிகமாக இவை எல்லாவற்றிற்கும் பெற்றோர் பங்குபற்ற வேண்டும். பிள்ளையை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புவதற்குப் பெற்றோரே பொறுப்பாகும். பிள்ளை பாடங்களுக்குச் சமூகமளிக்க முடியாவிடின் (உ+மாக நோய்) அது பற்றிப் பெற்றோரே அறிவிக்கவேண்டும். அவர்களின் குழந்தைகள் வீட்டுப்பாடங்களை செய்து முடிக்க வேண்டும் என்பதை பெற்றோர்கள் உறுதிப்படுத்த வேண்டும். பெற்றோர்கள் பள்ளிப் பாடங்கள் மற்றும் வீட்டுப்பாடங்களை தவறாமல் பார்த்து, ஆர்வம் காட்டினால், குழந்தைகளை சிறப்பாக உதவிக்கொடுக்க முடியும். சுவிஸ் கல்வி முறையை இன்னும் அறிந்துகொள்ளாதவர்களுக்காக சிறப்பு தகவல் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

## வினாக்களும் உதவிகளும்

ஏதாவது வினாக்கள் இருப்பின் பெற்றோர் எப்போதும் முதலில் வகுப்பாசிரியரை நாட வேண்டும். பெற்றோருக்கு உதவி தேவைப்படுமிடத்து வகுப்பாசிரியரே உதவி செய்வார். பிள்ளைக்கு ஏதாவது தேவைப்படுவதாக உணர்ந்தாலோ அன்றி ஏதாவது வினாக்கள் இருப்பினும் ஆசிரியரும் முதலில் பெற்றோரை நாடவேண்டும். பொதுவாகவே பெற்றோர் ஆசிரியருடன் தொடர்பைப் பேணி ஒருங்கிணைந்து செயற்படு தல் மிகவும் முக்கியம். பிள்ளை மனதில் அல்லது சூழலில் ஏதாவது கஸ்டங்களை அனுபவித்தால் பாடசாலை உளநலப்பிரிவை (Schulpsychologischer Dienst) நாடலாம். இங்கு பிள்ளைகளுக்கும் அவர்கள் பெற்றோருக்கும் இலவசமான உதவிகள் வழங்கப்படும்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-ar.ch/ta/school-and-education/compulsory-education

# தொழிற்கல்வி / துறைசார் பாடசாலைகள்

கட்டாயப்பாடசாலை முடிந்த பின்பு அதிகளவு இளையவர்கள் தொழில்கல்வி கற்கவே முடிவுசெய்கிறார்கள். எவர் உயர்கல்வி கற்க விரும்புகிறார்களோ அவர்கள் கட்டாயமாக ஒரு துறைசார் பாடசாலையில் ஒரு புலமைச்சித்தி பெற்றிருக்கவேண்டும். இதன் பின்பு தொழில்கல்வி கற்கவும் போகலாம்.

## கல்வியின் அர்த்தம்

நல்ல கல்வியும் தொழில் வாழ்வில் நல்ல வேலையும் ஒரு உயர்ந்த அர்த்தத்தைக் கொடுக்கும். கட்டாயப்பாடசாலையில் கிடைத்த திறமைகள் தான் எதிர்கால வசதி வாய்ப்புகளுக்கு முக்கியமாகும். கட்டாயப்பாடசாலை முடித்த இளையவர்களுக்குப் பலவிதமான வழிகள் திறந்துள்ளன. தொழில், படிப்பு மற்றும் தொழில் ஆலோசனைகள் இளைஞர்கள் மற்றும் பெற்றோருக்கு கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான கேள்விகளில் இலவசமாக ஆலோசனை வழங்குகின்றன.

## தொழில் அடிப்படைக்கல்வி

கட்டாயப்பாடசாலை முடிந்த பின்பு அதிகளவு இளையவர்கள் தொழில் அடிப்படைக் கல்வி (தொழில் பயிலுதல், Berufslehre) கற்கவே முடிவு செய்கிறார்கள். இளையவர்கள் தொழில் கற்கும் போது ஒரு நிறுவனத்தில் தொழில் செயன்முறையைப் பயிலுவது மட்டுமன்றி அதனுடன் சேர்ந்து தொழில் பாடசாலைக்கும் செல்வார்கள். தெரிவு செய்வதற்கு 250 க்கு மேற்பட்ட தொழில் துறைகள் உள்ளன. ஒரு தொழில்கல்வி பயில 2 -4 வருடங்கள் வரை எடுக்கும். இளையவர்கள் தாமாகவே தொழில் பயிலுமிடத்தை ஒரு நிறுவனத்தில் தேட வேண்டும். கட்டாயப் பாடசாலை வருடத்தில் கடைசி இரு வருடங்களும் தொழில் பயிலுமிடம் தேடுவதற்குரியது. இதற்குப் பாடசாலை உதவி செய்த போதும் பெற்றோரின் உதவியிலும் தங்கியுள்ளது. இளையவர்களுக்காகப் பலவித வசதி வாய்ப்புகளைக் காட்டுவது மட்டுமன்றி இலவச ஆலோசனையும் தருகிறது. தொழில் பயின்ற இளையவர்கள் தொழில்புலமைக்கு (Berufsmaturität) விண்ணப்பிக்கலாம். இதை தொழில் அடிப்படைக்கல்வி பயிலும்போதோ அன்றி முடிந்த பின்போ விண்ணப்பிக்கலாம்.

## துறைசார் பாடசாலைகள்

துறைசார் பாடசாலைகள் (Mittelschulen) அகலமான பொது அறிவைத் தருகின்றன. அதே வேளை பரந்த கல்வியறிவையும் தந்து பல்கலைக்கழகம் அல்லது உயர்கல்விப்பாடசாலைக்குப் (Fachhochschulen) போக வழி செய்கிறது. யிம்நாசியம் போய் புலமையடைந்தவர்கள் (gymnasiale Maturität) தொழில் கற்றுப் புலமையடைந்தவர்கள் (Fach-oder Berufsmaturität). யிம்நாசியபுலமை முடித்தவர்கள் நேரடியாக பல்கலைக்கழகத்திற்குச் செல்ல தகுதி பெறுகிறார்கள். துறைசார் அல்லது தொழில்புலமை கல்வியானது நேரடியாக உயர்கல்விப்பாடசாலைக்கு செல்ல வழிவகுக்கிறது. உயர்கல்விப்பாடசாலையானது யிம்நாசியப்புலமை கற்றவர்களுக்கான வழிவகை ஏற்பாடு செய்வதுடன் பல்கலைக்கழகத்திற்கு துறைசார் அல்லது தொழில்புலமை மாணவர்களுக்கு (ஒரு பரீட்சை மூலம்) செல்லவும் வழிவகுக்கிறது. எவற்றை மேலதிகமாக செய்ய விரும்புகிறார்களோ அதற்கு மேலதிக நடைமுறையை பின்பற்ற வேண்டும்.

## இணைப்புச்சலுகை

கட்டாய பள்ளி கல்விக்குப் பிறகு காந்தனில் நுழையும் இளம்வர்கள் குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் ஒரு பாலவீதம் திட்டத்தில் பங்கேற்க முடியும். இந்த திட்டம் தொழில்நுட்ப சந்தையில் நுழைவிற்கு முக்கியமாக கவனம் செலுத்துகிறது. ஒரு பாலவீதம் திட்டம் இளைஞர்களை பயிற்சி அல்லது கற்கை நிலையை கண்டுபிடிக்க உதவுகிறது. ஆர்வமுள்ளவர்கள் ஹெரிசாவை (Brücken AR) தொழில்முறை கல்வி மையத்துடனோ, தொழில்முறை, படிப்பு மற்றும் வேலையில் ஆலோசனையை தொடர்புகொண்டு கொள்கின்றனர்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-ar.ch/ta/school-and-education/vocational-education-and-training-middle-school

# பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிலையங்கள்

சுவிசில் 2 தெரிந்த உயர்கல்விச்சாலைகள் உள்ளன. பல்கலைக்கழகம் மற்றும் தொழில்துறைக்கல்லூரி. வெளிநாட்டு மற்றூறிற் பத்திரங்களுடன் இப்பாடசாலைகளுக்கு நேரடியாக விண்ணப்பிக்க முடியும்.

## உயர்கல்வி நடைமுறை

சுவிசின் உயர் கல்வி நிலையங்களில் பல்கலைக்கழகத்தையும் உயர் தொழிற்துறைக்கல்லூரியையுமFachhochschulen) (Tertiärstufe) வித்தியாசப்படுத்தமுடியும். தொழிற்துறைக்கல்லூரிகள் கூடுதலாக செயன்முறையையும் பல்கலைக்கழகங்கள் கூடுதலாக கோட்பாடுகளையும் கொண்டுள்ளன. இவ்விரு பாடசாலைநடைமுறைகளும் ஒருதரமட்டமாக்கப்பட்ட ஐரோப்பிய பொலோனா-நடைமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஐரோப்பாவால் அங்கீகரிக்கப்பட்ட சாதாரண அல்லது சிறப்பு தரத்தில் சித்தியடையலாம்.

## அனுமதித்தல்

ஒவ்வொரு உயர்கல்விக்கூடங்களும் வேறுவேறான அனுமதி நிபந்தனையை கொண்டிருக்கும். சுவிஸ் மற்றூறிற் பத்திரங்களுக்கு உயர்கல்வி அனுமதி நிச்சயமானது. வெளிநாட்டு மற்றூறிற் பத்திரங்கள் எப்போதும் அங்கீகரிக்கப்படுவதில்லை. கற்கவிரும்பும் பாடநெறிக்கு அவை உள்ள உயர்கல்விக்கூடத்திற்கு (பல்கலைக்கழகம்/தொழிற்துறைக்கல்லூரி) விண்ணப்பிக்கலாம். பொதுவாக மிகத்திறமையான டொச்மொழி தேவைப்படுகிறது. சில விதிவிலக்காக முற்றாக ஆங்கிலத்தில் நடைபெறும் துறைகளும் உள்ளன. தொழில், படிப்பு மற்றும் வேலையின் ஆலோசனை மற்றும் HEKS MosaiQ Ostschweiz நிபுணர் மையம், மூன்றாம் நிலை நிலவரங்களில் பல்வேறு வாய்ப்புகளுக்கான இலவச தகவல்களை வழங்குகின்றன.

## அதி உயர் தொழிற்கல்வி

சுவிசில் உயர்கல்விச்சாலைகளைத்தவிர அதிஉயர் தொழிற்கல்வியும் மேற்படிப்பு höhere Berufsbildung) கற்பதற்கு விரும்பத்தக்க வழியாக இருக்கிறது. இது தொழிற்சிறப்புநபரை ஒரு விசேடநிலைக்கு மற்றும் ஆளமான சிறப்;பான அறிவு மற்றும் கொண்டு செலுத்தும் தகமையையும் உருவாக்குகிறது. உயர் தொழற்பயிற்சியானது முடிவில் தொழிலிற்கான அடிப்படைப்பயிற்சியைத் தருகிறது. (தொழிற்பயிற்சி, Berufslehre). இதற்கு மற்றூறிற் முக்கியமில்லை. தொழில், படிப்பு மற்றும் வேலைவாய்ப்பு ஆலோசனைகள் பல்வேறு வாய்ப்புகள் பற்றி இலவசமாக தகவல் அளிக்கின்றன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-ar.ch/ta/school-and-education/universities-universities-of-applied-sciences

# பட்டப்படிப்பு அங்கீகாரம்.

வெளிநாட்டுப்பபட்டுப்படிப்பு மற்றும் இறுதி அறிக்கை எப்போதும் சுவிசில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. நிபந்தனைகளுக்குட்பட்டு இந்த பட்டப்படிப்பு சான்றிதளை அங்கீகரிக்கும்படி கோரலாம். ஒருசில தொழில்களுக்கு இவை நன்கு பிரயோசனப்படும்.

## அங்கீகரிக்கப்படல்

வெளிநாட்டு பட்டம் உள்ளவர்கள் அவற்றை சுவிசில் அங்கீகரிக்கும்படி கோரலாம். இந்த அங்கீகரிப்பின் மூலம் வெளிநாட்டின் பட்டம் அல்லது பயிற்சி முடிவு சுவிசின் பட்டம் அல்லது படிப்பின் முடிவுடன் ஒரே தகமையில் உள்ளதெனப்படும். சில முறைமைப்படுத்தப்பட்ட தொழில்களுக்கு (பராமரிப்புதொழில், ஆசிரியர் போன்றன.) அத்தொழில்களை செய்வதற்கு இவ் அங்கீகாரம் முக்கியம். இவ் அங்கீகாரத்திற்கு அவற்றின் தொழில் மற்றும் பட்டப்படிப்பைப் பொறுத்து வெள;வேறு நிலையங்கள் பெறுப்பானவை. ஓர் அங்கீகரித்தலானது கட்டணத்துக்குட்பட்டது. தகவல்களை கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமை தொடர்பான மாநில செயலாளர் அலுவலகம் மற்றும் Heks MosaiQ Ostschweiz நிபுணர் மையம் வழங்குகின்றன.

## தரம் உறுதிசெய்தல்

முறைமைப்படுத்தப்படாத தொழில்களை சுவிசில் செய்வதற்கு பட்டப்படிப்பு அல்லது பரீட்சை முடிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டியதில்லை. இந்தத் தொழில்களுககாக ஒரு தரநிலை உறுதிசெய்தலிற்கு (Niveaubestätigung) வின்ணப்பிக்க வேண்டும். இது வெளிநாட்டு பட்டப்படிப்பின் பெறுமதியை சுவிசின் பயிற்சித்திட்டத்துடன் ஒப்பிடுகிறது. இவ் உறுதிப்படுத்தல் வேலைதேடுதலிற்கு உதவும். நிலைத் தகுதிப்பத்திரம் தொடர்பான தகவல்களை கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமைக்கான மாநில செயலாளர் அலுவலகம் அல்லது HEKS MosaiQ Ostschweiz நிபுணர் மையம் வழங்குகின்றன.

## தொழிற்பயிற்சி முடிவை மீளச்செய்தல்.

தொழில் அனுபவம் , ஆனால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் அல்லது படிப்பு முடிவு இல்லாதவர்கள் சுவிஸ் அடிப்படைத்தொழிற்கல்வி அல்லது உயர் தொழிற்கல்வியை படித்துமுடிக்கலாம். இந்நடைமுறை அவர் முன்பு செய்திருந்து படிப்பு, தொழில் அனுபவம் மற்றும் வயதில் தங்கியுள்ளது. எதுவாயினும் ஒரு நன்கு டொச் தெரிந்தநிலை (B1/B2 ஜேர்மன் தரம்) மிகமுக்கியமானது. விருப்பமுள்ளவர்கள் தொழில், படிப்பு மற்றும் வாழ்க்கைத்துறைக்கான ஆலோசனையிடம் தகவல்களைப் பெறலாம் மற்றும் ஆலோசனை பெறலாம். ஒரு தொழில்துறை தகுதியை பிந்தைய கட்டத்தில் முடிப்பவர்கள் வேலை சந்தையில் தங்கள் வாய்ப்புகளை மேம்படுத்தி, தொடர்ந்த கல்விக்கான அணுகலை பெறுகிறார்கள்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-ar.ch/ta/school-and-education/recognition-of-qualifications